**சாட்சியின் வாக்குமூலம்**

பாகம் 111 சுற்றிக்கை உத்தரவு 11 உ.வி.மு.ச.பிரிவு - 1 மற்றும் உ.வி.மு.ச

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வேடசந்தூர்**

**அசல் வழக்கு எண்.114/2016**

**வா.சா.1**

| | | |
|---|---|---|
| சாட்சியின் பெயர் | : | அருள்ஜெபமாலை |
| தகப்பனார் பெயர் | : | சந்தியாகு |
| வயது | : | 50/2024 |
| தொழில் | : | |
| மதம் | : | |
| ஜாதி | : | |
| கிராமம் | : | நல்லமநாயக்கன்பட்டி |
| தாலுகா | : | திண்டுக்கல் |
| மாவட்டம் | : | திண்டுக்கல் |

1873ன் வருடத்திய வகைமுறை சட்டம் பிரிவு 10ன் படி சாட்சி அழைக்கப்பட்டு அங்கனமே உள்ளார்ந்த உறுதி வரை செய்யப்பட்டு 12.08.2024 ம் தேதி என்னால் சாட்சியம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

**பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

என்ன காரணத்திற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் நிலம் எழுதிக்கொடுக்கிறேன் என்று எழுதிக்கொடுக்கவில்லை என்பதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். பொதுவாக சொத்துக்கள் கிரையம் வாங்குவதற்கு முன்பு வில்லங்கம் பார்ப்பார்கள் என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வில்லங்கம் பார்த்தேனா என்றால் இல்லை. என்ன காரணத்திற்காக தாவா சொத்து சம்பந்தமாக வில்லங்கம் பார்க்கவில்லை என்றால் எனக்கு தெரியவில்லை. பிரதிவாதிகளிடமிருந்து தாவா சொத்து சம்பந்தமாக அசல் கிரையப்பத்திரத்தை வாங்கி பார்த்தேனா என்றால் இல்லை. பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வாதத்தை என் வழக்கறிஞர் மூலமாக தெரிந்து கொண்டேன். தாவா சொத்துக்களை பொறுத்து பிரதிவாதி மாடசாமி என்பவருக்கு 05.09.2012ம் தேதி ரூ.50,000/- க்கு கால நீட்டிப்பு பத்திரம் ஒன்றை எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். தாவா கிரைய உடன்படிக்கை ஆவணம் 27.08.2013ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். மாடசாமி என்பவருடன் பிரதிவாதி தாவா சொத்துக்களைபொறுத்து கிரைய உடன்படிக்கை ஏற்பட்டுள்ளது என்ற விவரத்தை தெரியுமா என்றால் எனக்கு தெரியும். மாடசாமி கேட்டுக்கொண்டதற்கிணங்க

பிரதிவாதி ரூ.50,000/- கடனுக்கு தான் தாவா சொத்து சம்பந்தமாக உடன்படிக்கை ஏற்பட்டது என்றால் சரிதான். பிரதிவாதி வாதிக்கு ரூ.50,000/- க்கு 3% வட்டி என்ற அடிப்படையில் ரூ.1500/- வீதம் 2015ம் வருடம் டிசம்பர் மாதம் வரை வட்டி செலுத்தியுள்ளதாக சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. 2016ம் ஆண்டு முதல் தான் வட்டி செலுத்தவில்லை என்றால் சரியல்ல. வாதி தன்னுடைய வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பியதை அதை பிரதிவாதி பெற்றுக்கொண்டு என்னிடம் நேரில் வந்து பிரதிவாதி மேற்கண்ட அறிவிப்பு குறித்து கேட்டார்கள் என்றால் சரியல்ல. பிரதிவாதி நேரில் கேட்டதன் காரணமாகத்தான் மேல்நடவடிக்கை எடுக்காமல் பதிலறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரியல்ல. தாவா கிரைய உடன்படிக்கை ஏற்படுத்தபட்ட தேதியிலோ அதற்கு முன்போ தாவா சொத்தை எனக்கு கிரையம் செய்து கொடுக்கும் எண்ணம் ஏதும் கிடையாது என்றால் சரியல்ல. தாவா சொத்தை கிரையம் பெற எப்போதும் நான் தயாராக இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து ரூ.5 லட்சம் மதிப்பிற்குரியது என்பதால் கடன் தொகை ரூ.50 ஆயிரம் இருந்ததால் பொறுப்பிற்காக தாவா உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. ரூ.10 ஆயிரத்திற்கு நீண்ட காலக்கெடு போட்டு எழுதியதற்கு காரணம் என்ன என்றால் எனக்கு காரணம் தெரியவில்லை. தாவா வழக்கானது தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

*Take down by me in open court and Read over to the witness and interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct*

Digitally signed by G ASHOK PRASATH

**Principal District Munsif**
**Vedasandur**